# கடற்கரை கவியரங்கு எண் - 625

நாள் 07-05-2023



# அறிவால் நிறைவோம்!

அறம் செய்து வாழ்வார் என்றும் அன்பால் நிறைந்திடுவார்!
சினம் கொண்டு வாழ்வார்க்குச் சிந்தையிலே பழுதேறும்!
பணம்என்று வாழ்வார்தம் பயணங்கள் முடிவதில்லை!
பகைகொண்டு வாழ்வாரோ அமைதியைப் பெறுவதில்லை!

பொலிகின்ற பொறாமை பெருந்தீயாய் வளர்ந்திருந்தே,
இருக்கின்ற யாவையும் ஒருநாள் இல்லாதுச் செய்துவிடும்!
தருகின்ற கரங்களின் தண்மையிலே அன்பிருக்கும்!
வருகின்ற துன்பத்தை வகைசெய்யும் மனம் வேண்டும்!

வாராத துன்பத்தை வருந்திமனம் நாளும் தேடிநின்றால்,
சீரான வாழ்க்கையதும் சிதிலங்களைப் பெற்றிடுமே!
போராட்டம் தனைத் தொலைத்து, பொலிந்திடு மனமே!
யாரோடும் பகைவேண்டாம் எவரோடும் சினம் வேண்டாம்!

ஊராள வேண்டாம் மனமே உனையாளு நீதினமே!
வேரான பழங்கதைகளை வெட்டிச் சாய்த்திடுவோம்!
மாறாத தொடர்நிலையே வாழ்க்கையிது என்றறிவோம்!
கேளாத சொற்களுக்கு விடைதேடி அலையாமல்,

கூறிடும் சொற்களிலே கொஞ்சும் தமிழ்ச் சேர்ப்போம்!
வேரிடும் மனஅழுத்தம் விளையாமல் தடுத்திடுவோம்!
யாரோடும் பகைவேண்டாம் எவரிடத்தும் சினம்வேண்டா!
கார்மேகம் சூரியனைக் கனப்பொழுதே மறைத்திருக்கும்!

போராட்டம் இல்லாமல் புதுமை செய்வோம் மனதினிலே!
சீராகச் சிந்தையதைச் செலுத்தியே மகிழ்ந்திருப்போம்!
சேராது துன்பங்கள், சிறுமைகளில் மனம் நாடாது போக,
ஆறாத வடுக்களின்றி ஆனந்தம் தனை யடைவோமே!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**
06-05-2023 (இரவு 11-50 மணி)

